# சிவகங்கை நகராட்சி

## சாதாரண கூட்டம்

நிகழும் பிலவ வருடம் 2022ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் (29.08.2022) நாள் திங்கள் கிழமை ஆவணி மாதம் 13ம் நாள் மாலை 03.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.CM.துரைஆனந்த் பி.ஏ,.**

**நகர்மன்ற தலைவர்.**

**சிவகங்கை நகராட்சி.**

# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>சாதாரண கூட்டம்</u>

2022ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29ம் நாள் சுபகிருது வருடம் ஆவணி திங்கள் 13ம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் சாதாரண கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கீழ்கண்ட பொருள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்கள் அனைவரும் வருகை தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
சிவகங்கை நகராட்சி

### <u>பொருள்கள்</u>

1. சிவகங்கை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் ஓட்டுநராக திரு.பெ.முருகன் என்பவர் 10.04.2021 முதல் அலுவலகத்தில் எவ்வித அனுமதி பெறாமல் அலுவலகத்திற்கு தகவல் கொடுக்காமல் தன்னிச்சையாக விடுப்பில் இருந்தும் அலட்சியப் போக்குடன் இருந்தது. இது குறித்து இவ்வலுவலக கடித ந.க.எண்..3149/2021/சி1. நாள்..21.05.2021ல் விளக்கம் கோரி குறிப்பாணை அனுப்பப்பட்டது. குறிப்பாணைக்கு உரிய விளக்கம் அளிக்காமல், பணிக்கு வராமல் இருந்துள்ளதால், இவ்வலுவலக குற்றச்சாட்டு குறிப்பாணை ந.க.எண்:3149/2020/சி1.நாள்:03.08.2021ல் வழங்கப்பட்டது. குறிப்பாணைக்கு உரிய விளக்கம் அளிக்காமல் இருப்பதுடன் இதுநாள் வரை பணியில் சேரவில்லை. இது தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பர அறிவிப்பு அறிவித்த ஒரு வார காலத்திற்குள் அலுவலகத்திற்கு நேரில் வந்து உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் இதுவே இறுதியான உத்தரவு ஆகும் என்றும் தவறும் பட்சத்தில் தங்கள் மீது 1977ம் ஆண்டு பொதுசுகாதாரப்பணி ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு (முறைப்படுத்தப்படாதது) விதிகள் விதி5(2) மற்றும் 5(8)ன் கீழ் பணி நீக்கம் செய்யப்படும் என தெரிவித்து இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலரால் அரசு துணை செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (விளம்பரம்) துறை, தலைமை செயலாகம், சென்னை அவர்கள் மூலம் தினகரன் தினசரி நாளிதழில் 12.04.2022ம் தேதியில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.விளம்பரம்

செய்யப்பட்டதிற்கு விளம்பர கட்டணம் ரூ.78803/-வழங்க கேட்டு 18.05.2022ல் பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது.

மேற்படி செலவின தொகை ரூ.78803/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

விளம்பர அவசர அவசியம் கருதி ரூ.78,803/-ஐ பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:3149/2020/சி1.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:152**

2. சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்றில் இருந்து பாதுகாத்து கொள்வது தொடர்பான அறிவிப்பு பொதுமக்கள் அறியும் வண்ணம் தமிழ்முரசு நாளிதழில் 30.06.2021 அன்று பிரசுரம் வெளியிடப்பட்டது மேற்படி பிரசுரம் செய்ததற்கான பட்டியல் தொகை ரூ.9,900/-ஐ Kal Publication(P) LTD-க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்:561/2022/எச்1)

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:153**

3. சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராரியாய் சுற்றித்திரியும் தெருநாய்களின் தொல்லை அதிகமாக உள்ளதால் அரசாணை எண்:106 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:10.06.2008ன் படியும், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களது ஆய்வுக் கூட்டத்தில் நகர்ப்பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அவற்றிற்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளவும், அதன்பின் வெறிநாய் தடுப்பூசி செலுத்தி மேற்கண்ட நாய்களுக்கு உரிய அடையாளம் இடப்பட்டு மீண்டும் பிடித்த இடத்திலேயே விட்டுவிடவும் நாய் ஒன்றுக்கு ரூ.790/- வீதம் 2021-2022ம் ஆண்டிற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:154**

4. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட 48 காலனி நடுநிலைப்பளி வளாகத்தில் நமக்கு நாமே திட்டம் 2021–22ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் வைப்பறை மற்றும் சமையலறை கட்டிடம் கட்டும் பணிக்கு 17.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எம்.கண்ணன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.27% அதிகம். |
| 2. | திரு.பி.முருகன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு. |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணி திட்டப்பணியென்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ளது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்..62/2022/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:155**

5. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:27, மானாமதுரை சாலையில் உள்ள பாதாளச்சாக்கடை பம்பிங் ஸ்டேஷனில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளது. மேற்காணும் இடத்தில் பேவர் பிளாக் தளம் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.9,50,000/– (ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மேற்படி பணிக்கான மதிப்பீட்டினை நகராட்சி வருவாய் நிதி 2022–23ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:573/2022/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:156**

6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் இந்நகராட்சியால் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகை ரூ.2500/-லிருந்து ரூ.5000/-ம் ஆக உயர்த்தியும், இத்தொகையை பெறுவதற்கு ஏதுவாக இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு தொகை ரூ.72,000/-ஆக உயர்த்தி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் (கொடு.தக.2) அரசாணை (நிலை) எண்:105, நாள்:19.10.2020 நாளிட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வழங்கப்படும் ஈமச்சடங்குத் தொகை ரூ.2500/-லிருந்து ரூ.5000/-ஆக உயர்த்தி வெளியிடப்பட்ட அரசாணையை பார்வையிட்டு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்:1915/2019/எச்1)

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:157**

7. சிவகங்கை நகராட்சி நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் 2022 சிவகங்கை நகராட்சி-பொது சுகாதாரப்பிரிவு மூலம் இந்நகரில் உள்ள 14771 வீடுகள் மற்றும் வியாபார நிறுவனங்களிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திட்டமான தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் மூலம் மீண்டும் மஞ்சப்பை மற்றும் நெகிழிப்பை பயன்பாட்டை தவிர்த்தல் ஆகியவற்றை செயல்படுத்த மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கலர் நோட்டீஸ் 10,000 (பத்தாயிரம்) எண்ணிக்கை மற்றும் மாண்புமிகு.தமிழக முதல்வர் அவர்களின் மஞ்சப்பை ஸ்டிக்கர் 14,000 (பதினான்கு ஆயிரம்) எண்ணிக்கையில் கொள்முதல் செய்து பயன்படுத்த அரசால் ஆய்வு கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இவற்றினை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.3,50,000/-(மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

இத்திட்டத்தினை சிவகங்கை 27 வார்டுகளிலும் செயல்படுத்த ஏதுவாக அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:158**

8. இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு 2021–2022ம் நிதியாண்டிற்கான காலணிகள் மற்றும் சோப்பு அரசு நிறுவனமான காதிகிராப்ட் சிவகங்கை நிறுவனம் மூலம் வாங்கி வழங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
1. மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.
2.செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:159**

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பையில்லா நகராட்சியாக மாற்றிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு (GARBAGE FREE CITY 3 STAR ) மற்றும் திறந்த வெளிக் கழிப்பிடம் இல்லாத நகராட்சியாக (ODF +) அறிவிப்பினை சிவகங்கை மாவட்ட நாளிதழில் விளம்பர அறிவிப்பை மாலை முரசு நாளிதழில் 04.03.2022 மற்றும் தினகரன் நாளிதழில் 18.03.2022 இரு தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்ட விளம்பரம் செய்தமைக்கு ரூ.11,100/–க்கான செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது மேற்கண்ட மாலை முரசு மற்றும் தினகரன் நிறுவனத்திற்கு மேற்கண்ட தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்
**ந.க.எண் 3136/2022/எச்1**
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:160**

10. சிவகங்கை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மூலம் தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் மூலம் மீண்டும் மஞ்சப்பை மற்றும் நெகிழிப்பை பயன்பாட்டைத் தவிர்த்தல் ஆகியவற்றை செயல்படுத்த மக்களுக்கு விழப்புணர்வு ஏற்படுத்த கலர் நோட்டீஸ் 10,000 (பத்தாயிரம்) எண்ணிக்கை மற்றும் மாண்புமிகு.தமிழக முதல்வர் அவர்களின் மஞ்சப்பை ஸ்டிக்கர் 14,000 (பதினான்கு ஆயிரம்) எண்ணிக்கையில் கொள்முதல் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் 3.50 இலட்சம் ஆகும். எனவே 28.06.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி |
|---|---|---|
| 1. | Tirunelveli District Multi purpose Service Industrial Co-Operative Society LTD., | ரூ.3,47,200/- |
| 2. | Kovilpatti Small Scale Industries Service Industrial Co-Operative Society LTD., | ரூ.3,31,100/- |
| 3. | The Thoothukudi District Hi-Tech Printing and Allied Service Industrial Co-Operative Society LTD., | ரூ.3,15,000/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த The Thoothukudi District Hi-Tech Printing and Allied Service Industrial Co-Operative Society LTD., நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2.அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்..1206/2022/எச்1)

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:161**

11. சிவகங்கை நகராட்சி வார்டு எண்.04ல் காந்தி வீதி காவலர் குடியிருப்பு அருகில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் ஆகியவைகள் உடைந்து உள்ளது. இதனால் மோட்டார் இயக்க முடியவில்லை, எனவே இரண்டு இடங்களில் புதிதாக சின்டெக்ஸ் டேங் அமைத்துக் கொடுக்க ஆகும் மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டு தொகை ரூ.3.00.இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:162**

12. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12 மருதுபாண்டியர் நகரில் உள்ள 1.50 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியானது 20 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாகும் . எனவே மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் சிமெண்ட் பூச்சுகள் உதிர்வதால் சேதமடைந்து காணப்படுகிறது. பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்குவதற்கு பராமரிப்பு பணி செய்ய ஆகும். மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/- ஆகும்.

மேற்படி பணியானது பொது மக்களின் அத்தியாவசியப் பணி என்பதாலும் பணியின் அவசர அவசியம் கருதியும் காலதாமதமின்றி செய்ய வேண்டியுள்ளதால் பணி மேற்கொள்ள நகர்மன்றத் தலைவரின் பார்வைக்கும் நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது,

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கான மதிப்பீட்டினை நகராட்சி வருவாய் நிதி 2022–23ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியானது பொதுமக்களின் அத்தியாவசிய பணி என்பதாலும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

   **அனுமதிக்கப்பட்டது.**
   **மன்றத் தீர்மான எண்:163**

13. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, கென்னடி தெரு மூவேந்தர் தெரு காந்தி வீதி மற்றும் சாக்ளா தெரு ஆகிய தெருக்களில் உள்ள பழுந்தடைந்த சிறுமின் விசை பம்பு மோட்டார்களை பழுது பார்க்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/– (ஐந்து இலட்சம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
மேற்படி பணிக்கான மதிப்பீட்டினை நகராட்சி குடிநீர் நிதி 2022–23ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண் : 389/2022/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:164**

14. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People's Movement for Clean Cities) நிகழ்ச்சிகள் ஒவ்வொரு மாதமும் 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளில் நடத்தவும், இந்நிகழ்ச்சி 03.06.2022 அன்று துவக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பேரணி நடத்தப்பட வேண்டும். கைப்பிரதிகள் Panphlets 10000 எண்ணிக்கையில் அச்சிட வேண்டும், Badge 1000 அச்சிட வேண்டும், கலை நிகழ்ச்சி நடத்த வேண்டும், மைக்செட், வாகனம் வைத்துக்கொள்ள பூங்காவில் மரக்கன்றுகள் 50 எண்ணிக்கை கலந்துகொள்ளும் நகர்மன்ற உறுப்பினர்கள், தன்னார்வலர்களுக்கு, இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சிற்றுண்டி வழங்க 250 பதாகைகள் (Hand Board) தயார் செய்ய வேண்டும். இதன்படி இந்நிகழ்ச்சிகள் நடத்த உள்ளுர் சந்தை விலையில் விலைப்புள்ளி கோரி இப்பணிகள் மேற்கொள்ளலாம். இவற்றிற்கு ஆகும் உத்தேச செலவு ரூபாய்.2,00,000/–(இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1.பொதுசுகாதாரப்பணியில் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியானது பொதுசுகாதாரப்பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்..962/2022/எச்1

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:165**

15. இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் சீருடை பெற தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு 2021–2022ம் நிதியாண்டிற்கான சீருடை அரசு நிறுவனமான கோ ஆப்டெக்ஸ் சிவகங்கை நிறுவனம் மூலம் வாங்கி வழங்கப்பட்டது. அந்த சீருடைக்கு தையற்கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

ரூ.70,000/–செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:166**

16. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு சாலைவரி மற்றும் சேவை வரி கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | வாகன எண் | செலுத்தவேண்டிய காலம் | சாலை வரி | சேவை வரி |
|---|---|---|---|---|
| 1. | TN63AL9446 | 01.04.2021 முதல் 31.03.2022 | 12500 | 500 |
| 2. | TN63AL9446 | 01.04.2022 முதல் 31.03.2023 | 12500 | 500 |
| 3. | TN63AC1606 | 01.04.2022 முதல் 31.03.2023 | 12560 | 500 |
| **மொத்தம்** | | | **37560** | **1500** |

மேற்கூறிய வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய சாலை வரி ரூ.37560/–ம் சேவை வரி ரூ.1500/– மொத்தம் ரூ.39060/–ஐ வட்டார போக்குவரத்து அலுவலகம் சிவகங்கைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பொதுசுகாதாரப் பணியில் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:167**

17. சிவகங்கை நகராட்சியில் குடிநீர் பாராமரிப்பு பணி, ஓட்டுநர் பணி அலுவலக உதவியாளர் ஆகிய நபர்களுக்கு ஒரு ஆண்டு பராமரிப்பிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு 08.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டாவறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கம் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தத்தாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். ஸ்ரீமாதா பிரிண்டர்ஸ், சிவகாசி | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 3.38% அதிகம் |
| 2. | திருவாளர்கள்.வல்லவன் என்டர்பிரைசஸ் | மதிப்பீட்டு விலைவிகிதம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் வழங்கிய ஒப்பந்தத்தாரர் திருவாளர்கள்,வல்லவன் என்டர்பிரைசஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று ஒப்பந்தத்தாரர் திருவாளர்கள்.வல்லவன் என்டர்பிரைசஸ் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
**(ந.க.எண்..1145/2022/இ1)**
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:168**

18. சிவகங்கை நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில், நகரின் முக்கிய சாலைகளான தொண்டி ரோடு மற்றும் திருப்பத்தூர் ரோடு, மானாமதுரை ரோடு, மேலூர் ரோடு ஆகிய சாலைகளில் அமைந்துள்ள சென்டர் மீடியா தெருவிளக்குகளுக்கு கேபிள்கள் பழுதடைந்து விளக்குகள் எரியாமல் உள்ளது. இதனால் இரவு நேரங்களில் பொதுமக்கள் நடமாட மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் குறுக்கு தெருக்களில் உள்ள டியூப்லைட் மற்றும் LED விளக்குகள் பழுதுபார்க்க போதுமான உபகரணங்கள் இருப்பில் இல்லை. எனவே பொதுமக்களின் அத்தியாவசியம் கருதி தேவையான மின் உபரணங்களை ரூ.5.00 இலட்சத்திற்கு மதுரை மாவட்ட பாண்டியன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:169**

19. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான தெப்பக்குளம் கிழக்குக் கரை, முத்துராமலிங்கம் தெரு, இராஜேந்திர பிரசாத் தெரு, மஜித்ரோடு மனோகரன் மருத்துவர் வீடு எதிர்புறம் புதூர் ரோடு, மஜித்ரோடு சந்திப்பு சுந்தரமகாலிங்கம் கோவில் அருகில் மற்றும் வீட்டு வசதி வாரியம் சி பிளாக் ஆகிய பகுதிகளில் உள்ள 7 எண்ணிக்கை சிறுமின்விசை மோட்டார் பம்பு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் ஆகியவை பழுதடைந்துள்ளது. இதனை சரிசெய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. மேற்படி பணியானது குடிநீர் சம்மந்தப்பட்ட பணி என்பதால் உடனடியாக சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே, இப்பணியை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாததால், பணியின் அவசர கருதி நகராட்சி சட்ட விதிகள் 1920 உபவிதி 15ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர், திரு.பி.தங்கபாண்டியன் என்பவர் மூலம் பணி மேற்கொண்டதற்கும் இதற்கான செலவினத்தொகை ரூ.4,10,000/- த்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். /2022/இ2)**

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:170**

20. சிவகங்கை நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் கடந்த ஆறு ஆண்டுகளாக காலியாக உள்ளது. இதனால் பணிகள் மிகவும் தேக்கமடைந்துள்ளது. எனவே நிர்வாக நலன் கருதி மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்துள்ள ஊதிய விகிதத்திற்கு உட்பட்டு பொதுபிரிவு பிரிவிற்கு இரண்டு தட்டச்சர் பணியாளர்களை தனி நபர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01.07.2022 முதல் 31.10.2022 வரை வேலை நாட்களுக்கு மட்டும் நியமித்துக் கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.80,000/- அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.தட்டச்சர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி செலவின தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகர்மன்றத் தலைவர் அவர்கள் 10.08.2022ல் முன் அனுமதி அளித்து நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:171**

21. இந்நகராட்சி பொதுப் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு தட்டச்சர்கள் பணிக்கு தட்டச்சு பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு விநியோகம் செய்ய 01.06.2022 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தத்தாரர் பெயர் மற்றும் முகவரி | நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு அளித்துள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு,எம்,நாட்டரசன்,<br>ஒப்பந்ததாரர்,<br>5/1, ராஜாஜி தெரு, சிவகங்கை. | ரூ. 460/– |
| 2. | திரு.பி,முருகன்,<br>ஒப்பந்ததாரர்,<br>13, மருது பாண்டியர் தெரு, சிவகங்கை. | ரூ.470/– |

**அலுவலகக்குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் : 1ல் குறிப்பிட்டுள்ள திரு,எம்.நாட்டரசன் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து 01.07.2022 முதல் 31.10.2022 வரை நான்கு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1199/2021/இ1.**

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:172**

22. சிவகங்கை நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள போதிய அளவு நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் 75 தூய்மைப் பணியாளர்கள் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் என்ற நிறுவனம் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி ஆணை 30.06.2022ம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் ந.க.எண்..2343/2021/எச்1. நாள்..23.11.2021ன் படி புதிய அளவு கோலின் படி பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி நியமிக்க அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது பொது சுகாதாரப் பணிகள் பாதிக்கப்படாமல் பொது பொதுசுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி தற்போது இப்பணிகளை ஒப்பந்த முறையில் மேற்கொண்டு வரும் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ண்ட சர்வீஸஸ் நிறுவனதிற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இதே ஊதிய விகிதத்தில் 01.07.2022 முதல் மேலும் ஓராண்டு

(12 மாதங்களுக்கு) பணி ஆணை நீட்டித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:173**

23. சிவகங்கை நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள போதிய அளவு நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் 58 தூய்மைப் பணியாளர்கள் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் என்ற நிறுவனம் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி ஆணை 30.06.2022ம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் ந.க.எண்..2343/2021/எச்1. நீள்..23.11.2021ன் படி புதிய அளவு கோலின் படி பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி நியமிக்க அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது பொது சுகாதாரப் பணிகள் பாதிக்கப்படாமல் பொது பொதுசுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி தற்போது இப்பணிகளை ஒப்பந்த முறையில் மேற்கொண்டு வரும் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ண்ட சர்வீஸஸ் நிறுவனதிற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இதே ஊதிய விகிதத்தில் 01.07.2022 முதல் மேலும் ஓராண்டு (12 மாதங்களுக்கு) பணி ஆணை நீட்டித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:174**

24. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..13, கிருஷ்ணா லே அவுட் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு 14.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.சுப்பிரமணியன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 2.29% அதிகம் |
| 2. | திருமதி.எம்.அம்சவள்ளி, சிவகங்கை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.08% குறைவு. |

அலுவலகக்குறிப்பு :

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திருமதி.எம்.அம்சவள்ளி என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணி திட்டப்பணியென்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.எம்.அம்சவள்ளி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1124/2022/இ1**
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:175**

25. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..07, சாஸ்திரி 5வது தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு 14.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.முருகன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.04% குறைவு. |
| 2. | திரு.எம்.கண்ணன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 2.53% அதிகம். |

அலுவலகக்குறிப்பு :

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.04% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணி திட்டப்பணியென்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1124/2022/இ1)**
**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:176**

26. சிவகங்கை நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்..25, அகிலாண்டபுரத்தில் சமுதாயக் கழிப்பறை கட்டிடம் கட்டுதல் பணிக்கு தூய்மை பாரத இயக்கம் 2.0 (நகர்ப்புறம்) 2021-22ன் கீழ் மதிப்பீடு ரூ.24.96 இலட்சத்திற்கு 13.06.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிளும் 15.06.2022 அன்று விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள்.எம்.எஸ்.டி ராஜ் கன்ஸ்ட்ரக்ஸன், கோட்டூர். | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 04.92% அதிகம். |
| 2. | திருவாளர்கள்.எஸ்.எஸ் அன்ட் கோ, தேவகோட்டை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 5.74% அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்ட பணி திட்டப்பணியாக இருப்பதாலும், பணியிமை விரைவாக உரிய காலத்தில் முடிக்கும் பொருட்டும் மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக்காட்டிலும் 04.92% அதிகம் அளித்துள்ள திருவாளர்கள். எம்.எஸ்.டி ராஜ் கன்ஸ்ட்ரக்ஸன், கோட்டூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். பணியின் அவசர அவசியம் கருதியும் கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு Letter of Acce[tance கடிதம் வாயிலாக 1% தொகையினை (4.92% மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகம் என்ற விலைவிகிதத்தில்) செலுத்த கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. மேற்கண்ட பணியானது திட்டப்பணி என்பதாலும் பணியினை உரியகாலத்தில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்க கொண்டுவர வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் நடைமுறை தொகுதி நூல் பத்தி எண்..2.7.2ன் படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு வருவதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டைக்காட்டிலும் 4.92% அதிகம் அளித்துள்ள திருவாளர்கள். எம்.எஸ்.டி ராஜ் கன்ஸ்ட்ரக்ஸன், கோட்டூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்குள் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.825/2022/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:177**

27. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..20, நெல்மண்டி தெருவில் பாராளுமன்ற (மக்களவை) உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தி திட்டம் 2021–2022ன் கீழ் ரூ.2.30 இலட்சம் மதிப்பீட்டில் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணிக்கு 19.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.முருகன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.15% குறைவு. |
| 2. | திருமதி.எஸ்.இந்திராணி, சிவகங்கை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 1.77% அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணி திட்டப்பணியென்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1328/2022/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**மன்றத் தீர்மான எண்:178**

28. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..05, சுத்தானந்த பாரதி தெருவில் பாராளுமன்ற (மக்களவை) உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தி திட்டம் 2021–2022ன் கீழ் ரூ.3.70 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு 19.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.முருகன், சிவகங்கை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 1.02% அதிகம். |
| 2. | திருமதி.எஸ்.இந்திராணி, சிவகங்கை. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.07% குறைவு. |

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.இந்திராணி என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணி திட்டப்பணியென்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.இந்திராணி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1328/2022/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:179**

29. பொதுசுகாதாரப்பிரிவு –சிவகங்கை நகராட்சி – தூய்மைப் பணியார்களுக்கான உரிய பாதுகாப்பு உபகரணங்கள் கீழ்கண்ட விபரப்படியான பொருட்கள் இந்நகரின் நிரந்தர தூய்மைப் பணியாளர் 74 பணியாளர்களுக்கு வாங்கி வழங்கிட வேண்டியுள்ளது.

| **வ.எண்** | **பாதுகாப்பு உபகரணங்களின் விபரம்** | **எண்ணிக்கை விபரம்** |
|---|---|---|
| 1. | தலைக்கவசம் | 49 Nos |
| 2. | காலுறைகள் (கம்பூட்ஸ்) | 49 Nos |
| 3. | ஒளிரும் சட்டை 2 set/நபர் ஒன்றுக்கு | 150 Nos |
| 4. | கையுறை (Gloves) | 2000 Nos |

இந்நகரின் தூய்மைப் பணிகளின் அவசர அவசியம் கருதியும், பணியாளர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்கிடவும் இவற்றிற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:180**

30. பொதுசுகாதாரப்பிரிவு – சிவகங்கை நகராட்சி – தூய்மைப் பணிகளுக்கு குப்பைகளை அகற்றிய பின்புப் பேருந்து நிலையம், உழவர் சந்தை, கடைவீதி மற்றும் முக்கிய வீதிகளில் தொற்று நோய் பரவாமல் தடுக்க கீழ்காணும் விபரப்படி கிருமி நாசினிகள் தேவைப்படுவதால் இவைகளை வாங்கி வழங்கவும் இவைகளுக்கு ஆகும் உத்தேச செலவு ரூ.4,00,000/– (நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | தேவையான அளவு விபரம் |
|---|---|---|
| 1. | சுண்ணாம்பு தூள் | 10 MT |
| 2. | பிளீச்சிங் பவுடர் | 5 MT |
| 3. | பினாயில் (ஒயிட்) | 500 LTR |
| 4. | இ.மருந்து (நுவான்) | 50 KG |

**அலுவலகக்குறிப்பு :**

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:181**

